SRI S. M. ANNAMALAI: துப்பு துலக்கப்படுவது மிகவும் குறைவாக இருக்கிறதே? துப்பு துலக்குவதற்கு இங்கிருந்து ஏதாகிலும் போலீஸ் நாய்கள் அழைத்துச் செல்லப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: துப்புக் கண்டு பிடிப்பது என்பது ஒன்றும் குறைவாக இருப்பதாக நான் ஒப்புக்கொள்ளவில்லை.

Kandamanur-Varushnad road

* 364 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1959-ல் மதுரை ஜில்லாவில் ஆதிவாசிகள் நலனுக்காக எத்தனை ரோடுகள் போட திட்டமிடப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை ரோடுகள் போடப்பட்டன?

(இ) மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா கண்டமனூரி லிருந்து, வருஷநாடுவரை ரோடு போடத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருந்தும் அந்த வேலை நடக்காத காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Only Village Communications intended to serve villages are sanctioned and are under execution. No specific road scheme has been sanctioned for the benefit of aboriginals in Madurai district.

(*b*) Does not arise.

(*c*) There is no such proposal in the Second Five-Year Plan.

SRI V. SUBBIAH: இந்த ரோடானது மிக வளம் பொருந்திய மணல் வளம் உள்ள வருஷநாடு மலைப் பிரதேசத்தையும் ராமநாதபுரம் ஜில்லா உத்தராயிருப்பையும் இணைக்கக்கூடியதாக இருக்கும் ரோடாகையால், அதை அம்மாதிரி இணைப்பதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Inscriptions discovered in Panmozhi firka

* 365 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென்காசி தாலுகா பன்மொழி பிர்க்கா, குத்துக்கால் வலசை கிராமத்தில் சமீபத்தில் புராதன கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டதா?

(ஆ) கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணர்கள் அதைப்பற்றிக் கூறும் விவரமென்ன?